[28th March 1969

(இ) இந்த இருப்பிலிருந்து ஏற்கெனவே கொடுக்கப்பட்டு வந்த ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் தொழிலதிபர்களுக்கு எவ்வளவு கொடுக்கப் பட்டது ?

(உ) 1—3—67 முதல் 1—7—68 வரை புதிதாக எத்தனை பேருக்கு உரிமம் வழங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) 1967 மார்ச்சில் 3·729 மெட்ரிக் டன் அளவுள்ள துரு ஏறு எஃகுத் தகடுகள் இருப்பிலிருந்தன.

(இ) 151 தொழிற் பிரிவுகளுக்கு வழங்க வேண்டியிருந்ததாலும், மேற்கூறிய இருப்பு கொஞ்சமாக இருந்ததாலும், யாருக்கும் அதிலிருந்து வழங்க முடியவில்லை.

(உ) துரு ஏறு எஃகுத் தகடுகளை இறக்குமதி செய்வதற்கு மாநில தொழில் வணிக நெறியாளர் அலுவலகம் உரிமம் வழங்குவது இல்லை. ஆனால், அத்தகைய எஃகுத் தகடுகளை நேரடியாக இறக்குமதி செய் வதற்கு உரிமங்களைப் பெற 1—3—1967 முதல் 1—7—1968 வரை, இன்றியமையாததெனக் குறிப்பிடும் சான்றுகளை, நெறியாளர் அலுவலகம் புதிதாக 211 பேர்களுக்கு வழங்கியுள்ளது.

'Polyester Fibre' Factory

* 279 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to establish 'Polyester' Factory in Tamil Nadu ; and

(*b*) at what cost and where this will be established?

" பாலிஸ்டர் இழை " தொழிற்சாலை.

***திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு (திரு என். ஆர். தியாகராஜன்** சார்பில்) : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழகத்தில் " பாலிஸ்டர் " தொழிற்சாலை நிறுவும் உத்தேசம் உண்டா ?

(இ) எவ்வளவு செலவில், எங்கு நிறுவப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) & (இ) : சென்னையில் ஏறக் குறைய பத்து கோடி ரூபாய் செலவில் " பாலிஸ்டர் இழை " (Polyester Fibre) உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்காக தனியார் கம்பெனி ஒன்றிற்கு மத்திய அரசு பூர்வாங்க அனுமதியை அளித்துள்ளது.

Text-Books Committee

* 280 *Q.*—THIRU R. KRISHNASWAMY NAIDU (on behalf of THIRU N. R. THIAGARAJAN): Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) the names of the members of the Tamil Nadu Text-Books Committee ; and